அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

173—

மேம்பாலம்

***53384 திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், கலிங்கப்பட்டி முதல் கரிசல்குளம் வரையிலுள்ள சாலையில் நிசேப நதியின் குறுக்கே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், கலிங்கப்பட்டி முதல் கரிசல்குளம் வரையிலுள்ள சாலையில் நிசேப நதியின் குறுக்கே நபார்டு வங்கியின் நிதியுதவியோடு ரூ.342 இலட்சம் செலவில் பாலம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் 2–6–2012 அன்று பொது மக்களின் பயன்பாட்டிற்காகக் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்தியம் நீயே தருமத் தாயே, குழந்தை வடிவே*

2015 ஆகஸ்ட் 31]

தெய்வ மகளே". தன்னுடைய வாழ்வையே தமிழக மக்களுக்காக அர்ப்பணித்து, (மேசையைத் தட்டும் ஒலி) தியாக வாழ்வை மேற்கொண்டு, சூதுமதியாளர்களின் சூழ்ச்சிகளை வென்று, ஆர்.கே. நகரில் மாபெரும் வரலாற்று சாதனையைச் செய்து, தமிழகத்தில் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழக மக்களைக் காக்க வந்த தாயே, தங்களின் திருவடிகளை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பிட்ட கரம் விலகும் முன்னே வரம் தரும் தாய் அவர்கள், இந்தக் கேள்வி கேட்டு, இந்த அவைக்கு வரும் முன்னே திட்டத்தை வகுத்து, அதற்கான நிதிகளையும் ஒதுக்கி, இன்று பாலத்தையும் கட்டிக் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், கலிங்கப்பட்டிவாழ் மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிக்கு வரவேண்டுமென்று சொன்னால், 12 கிலோ மீட்டர் சுற்றி வரவேண்டும். இன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அமைத்துக் கொடுத்திருக்கின்ற அந்தப் பாலத்தின் மூலமாக அந்தப் பகுதிக்குச் செல்லக்கூடிய கலிங்கப்பட்டி மாணவச் செல்வங்களாக இருந்தாலும், விவசாயிகளாக இருந்தாலும் சுலபமாக வந்துசெல்வதற்கான ஒரு வாய்ப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இன்று திரு. வைகோ அவர்கள்கூட அந்தப் பாலத்தின் வழியாகத்தான் செல்வதற்கான சூழ்நிலையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

[2015 ஆகஸ்ட் 31

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலை N.H. 67 மூன்று மாநிலச் சாலைகளை இணைக்கும் சாலை. இந்தச் சாலையைக் கோடானுகோடி மக்கள் பயன்படுத்திக்கொண்டு வருகின்றார்கள். இது, முதுமலை காப்பகத்தின் வழியாகச் செல்லக்கூடிய சாலையாகும். தொரப்பள்ளியிலிருந்து கக்கனாளா வரையுள்ள சாலை படு மோசமாக உள்ளது. இந்தச் சாலைக்குத் தேவையான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டும், வனத் துறையின் அனுமதி கிடைக்கவில்லை என்று சொல்லி, அந்தப் பணியை நிறைவு செய்யாமல் வைத்திருக்கின்றார்கள். கர்நாடக மாநிலம், பந்திப்பூரில் இதேமாதிரியான சாலை இருக்கின்றது. அங்கு மட்டும் அனுமதி கொடுக்கப்பட்டு, அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவ்வாறு இருக்கையில், தமிழகத்தில் மட்டும் ஏன் வனத் துறையின் அனுமதி கிடைக்காமல் இருக்கிறது? இந்தச் சாலை படு மோசமாக இருக்கின்ற சூழ்நிலையினால் பயன்படுத்த முடியாமல் இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு, உடனடியாக இந்தச் சாலையைச் சீர்செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையைச் சீரமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதி புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவேதான் அங்கே செய்ய முடியவில்லை. அங்கு வனத் துறையின் மூலமாக அனுமதி பெற்றுதான் அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால், உச்ச நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருக்கின்றது. ஆகவே, அதையெல்லாம் நெறிமுறைப்படுத்தி, உரிய முறையில் வனத் துறையிடம் அனுமதி பெற்று, அந்தச் சாலையைச் சீரமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

2015 ஆகஸ்ட் 31]

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட சென்னையில் இருக்கின்ற மிக முக்கிய பாலமான வியாசர்பாடி மேம்பாலம் பற்றி ஏற்கெனவே கேள்வி எழுப்பியபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இருப்புப் பாதைக்கு மேலாக இருக்கிற பகுதியிலே இரயில்வே துறைதான் இணைப்பைச் செய்ய வேண்டும். அதனால்தான் தாமதம் ஆகின்றது என்று பதில் கூறினார்கள். இப்போது அந்த வேலைகளை அவர்கள் வேகமாகச் செய்து கொண்டிருக்கின்றார்கள். இதர வேலைகள் தாமதமாக நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, வேலைகளைத் துரிதப்படுத்தி, வட சென்னை மக்களுக்கு தீபாவளிப் பரிசாக அந்தப் பாலம் திறந்து வைக்கப்படுமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வியாசர்பாடி பாலப் பணிகள் இப்போது 83 சதவிகிதம் முடிவுற்றிருக்கின்றன. பாலத்தின் வலதுபுற பகுதியில் சத்தியமூர்த்தி நகர் பகுதியில் பணிகள் முடிக்கப்பட்டு, வருகின்ற அக்டோபர் மாதம் மக்களின் பயன்பாட்டிற்காக ஒரு பகுதி திறக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இரயில்வே பணிகள் நடைபெற்று வருகின்றன. இரயில்வே பணிகள் முடிக்கப்பட்ட பிறகுதான் அந்தப் பகுதியில் இருக்கின்ற பாலப் பணிகளைத் தொடர முடியும் என்கிற காரணத்தினால்தான் காலதாமதம் ஏற்படுகின்றது. ஆகவே, இரயில்வே பணிகள் முடிந்தவுடன், பாலப் பணிகளும் தொடர்ச்சியாக நடைபெற்று முடிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, விரைவாக அந்தப் பணிகளை முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.*

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் பொதுச் செயலாளர், நிரந்தர முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலே, கடவு எண் 7–ல் பாலப் பணிகள் ஓரளவு நடந்து முடிந்த நிலையில், தனியார் ஒருவர் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினாலே, அந்தப் பணிகள் விரைவாக நடக்காமல், தடைபட்டுக் கிடக்கின்றன. ஆகவே, அந்த வழக்கு எந்த நிலையில் இருக்கிறது? வழக்கை விரைவாக முடித்து, மக்களுடைய பயன்பாட்டிற்கு, அந்தப் பாலத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கரங்களால் திறந்து வைக்கிற நாள், எந்த நாள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடவு எண் 7 பகுதியில், பாலப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, தனியார் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினாலே, அது தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த வழக்கு முடிந்த பிறகு விரைவாகப் பணிகள் துவங்கப்பட்டு, பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கு அது கொண்டுவரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

174—

தொழிற்பேட்டை

***34772—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—